Page.No.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.517/2025

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | RAMESH |
| FATHER'S NAME | : | MALLIGARJUN |
| VILLAGE | : | PARADHARAMI |
| OCCUPATION | : | BUSINESS |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 08th day of MAY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது வீட்டிடம் வந்து தகராறு செய்யும்போது தெரியும். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 2025ம் வருடம் ஒரு நாள் மாலை 07.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் எனது வீட்டிடம் வந்து என்னிடம் பிரச்சனை செய்து கொம்பை வைத்து என்னை அடிக்க வந்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யதார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் 1 வது எதிரியின் பெயர் விக்ரம் ஆகும். 2வது எதிரியின் பெயர் ஞாபகம் இல்லை. நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் ஓரளவிற்கு எழுதபடிக்க தெரியும். காவல் நிலையத்தில் புகார் மனுவை நான்தான் எழுதி கொடுத்தேன். நான் எழுதி கொடுத்த புகாரின் மீது வழக்கு பதிவு செய்தார்களா என்றால் பதிவு செய்தார்கள்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து எனது மருமகள் ஜெயந்தி என்பவருடையது ஆகும். புகாரை அவர்தான் எழுதினார். புகார் அளித்த தேதி ஞாபகம் இல்லை. ஒன்பதாவது மாதம் அல்லது பத்தாவது மாதத்தில் இரவு 8 மணியளவில் புகார் அளித்தேன்.

3. புகார் அளிப்பதற்கு முன்பு 1வது எதிரி என் மீது புகார் அளித்திருந்த விவரம் எனக்கு தெரியாது. எனது மகன் மீது 1வது எதிரி அளித்த புகாரின் விசாரணைக்காக நான் காவல் நிலையம் சென்றேனா என்றால், நான் செல்லவில்லை வீட்டிடம் வந்து விசாரணை செய்தார்கள்.

4. 1வது எதிரி விக்ரம் அளித்த புகாரின்பேரில் நான் விசாரணைக்காக DSPஅலுவலகத்திற்கு சென்றிருந்தேனா என்றால், நாங்கள் யாரும் செல்லவில்லை, வீட்டில்தான் வந்து விசாரணை செய்தார்கள். தேதி, ஞாபகம் இல்லை, கடைசியாக ஒரு நாள் மட்டும் DSPஅலுவலகத்திற்கு விசாரணைக்காக சென்றோம்.

5. ஆஜர் 1வது எதிரி புகார் அளித்த பின்னர் இரண்டாவதாக புகார் மனுவை நான் எதற்காக அளித்தேன் என்றால், முதலில் என்னிடம் பிரச்சனை செய்ததற்காக அளித்தேன். எனது வீட்டிடம் வந்து போலிசார் எந்த புகாரின்பேரில், எந்த வழக்கு சமபந்தமாக விசாரணை செய்தார்கள் என்றால், எனது மகன் மீது புகார் அளித்திருப்பதாக விசாரணை செய்தார்கள்.

6. வேறு எந்த வழக்கிலும், நான் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக செல்லவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி கொடுத்த புகாரின்பேரில் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் பெயர் செந்தில்வேலவன் ஆவார். விசாரணை செய்த உதவி ஆய்வாளர் பெயர் சந்திரசேகர் அல்லது செந்தில்வேலனா என்றால் சந்திரசேகர் ஆவார்.

7. உதவி ஆய்வாளர் சந்திரசேகர் என்னை எந்த தேதியில் காவல் நிலையத்தில் விசாரணை செய்து கையொப்பம் பெற்றார் என்றால், என்னிடம் எந்த கையொப்பமும் பெறவில்லை. எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எந்த விதத்தில் தொடர்பு என்று எனது புகாரில் சொல்லயிருந்தேனா என்றால் சொல்லியுள்ளேன், நான் 1 லட்சம் சீட்டு கட்டியது தொடர்பாக பழக்கம். எனது புகாரில் மாதாந்திர சீட்டு கட்டியுள்ளது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

9. நான் யாரிடம் எவ்வளவு சீட்டு தொகை கட்டி வந்தேன் என்ற விவரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். நான் 2வது எதிரியிடம் சீட்டு கட்டியதற்கு ஆதாரம் ஏதாவது காவல் நிலையத்தில் அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்யவில்லை.

10. 1வது எதிரி விக்ரம் என்பவருக்கும், எனக்கும் பணம் சம்பந்தமாக கொடுக்கல், வாங்கல் பழக்கம்தான் என்றால் சரியல்ல, அவருக்கும் எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை, நான் 2வது எதிரியிடம் தான் சீட்டு கட்டியிருந்தேன். நான் 2வது எதிரியிடம் கட்டியதாக சொல்லப்படும் 1லட்சம் சீட்டு எந்த மாதம் தொடங்கியது, எந்த தவணைகள் என்ற விவரம் என்றால் சொல்ல முடியுமா என்றால், நான் 18வது தவணை சீட்டு எடுத்தேன். 2 மாதங்கள் ஆகியும் பணம் தராததால் 2வது எதிரியிடம் கேட்டதத்றகு 1வது எதிரியை அழைத்து வந்து எனது வீட்டிடம் பிரச்சனை செய்தார்.

11. எனது செல்போனில் பண பரிவர்த்தனைக்காக விவரங்களை போலிஸ் விசாரணையின்போது சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் 2வது எதிரி ராக்கேஷ் என்பவருக்கு எந்த எண்ணில் இருந்து பணம் அனுப்பினேன் என்றால் 7639945718 ஆகும். 2வது எதிரி ராக்கேஷ் என்பவரின் செல்பேசி எண் செல்போனில் பதிவு செய்துள்ளேன். பார்த்துதான் சொல்லமுடியும். நான் பணம் அனுப்பியதற்கான ஆதாரம் அவர் எனக்கு சீட்டு பணம் அனுப்பிய ஆதாரம் எனது செல்போனில் உள்ளது.

12. 2வது எதிரி ராக்கேஷ் என்பவர் பாக்கி தொகையான ரூ.42000 எனக்கு தரவேண்டியுள்ளது. போலிஸ் விசாரணையின்போது மேற்சொன்ன விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும், ஆஜர் 2வது ராக்கேஷ் என்பவருக்கும்

சிட்டு கட்டியது தொடர்பாக சம்பந்தம் இருந்தது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

13. எனது மகனுக்கும், ஆஜர் எதிரிகளுக்கம் ரூ.40 லட்சம் பண பரிவர்த்தனை இருந்தது என்றாலும், மேற்படி பணபரிவர்த்தனையில் எனது மகனால் பிரச்சனை ஏற்பட்டதால் எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பரதராமி காவல் நிலையத்திலும், DSP அலுவலகத்திலும் என்னை விசாரணை செய்தபோது எனது மகன் கொடுத்ததாக ரூ. 40 லட்சதிற்குரிய காசோலையை என்னிடம் காட்டினார்கள் என்றாலும், நான் அதை பார்த்தேன் என்றாலும் சரியல்ல, நான் பார்க்கவில்லை. மேற்படி விவரம் குறித்து DSP அவர்கள் என்னை விசாணை செய்தார்களா என்றால் இல்லை.

14. எனது மகன் இரண்டு காசோலையை கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. இதுநாள்வரையில் எனது மகன் 2 காசோலை கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. ரூ.40 லட்சம் பணத்தை ஆஜர் எதிரிகளிடம் எனது மகன் வாங்கி கொண்டு திரும்ப தராததால் எதிரிகள் எனது மகனை பணத்தை திரும்ப கேட்டபோது ஜாதிய வன்கொடுமை செய்ததாக எனது மகன் மீது புகார் உள்ளது என்றால், அதுபோன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை.

15. பரதராமி காவல் நிலைய குற்ற எண். 87/25 பதிவு செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதுபோன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் எனக்கு பதிவு செய்தார்களா என்று தெரியாது. நான் நீதிமன்றத்தில் எனது மகனை காப்பாற்ற வேண்டும்என்பதற்காக பொய் புகார் அளித்து, பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16. எனது மகனை சட்டத்திற்கு புறம்பாக காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பொய் புகார் அளித்து, முன்னுக்குபின் முரணாக குறுக்கு விசாரணையில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்லியுள்ள 08.06.2025 அன்று எனது மகனிடம் எதிரிகள் பணத்தை திரும்ப கேட்க வந்ததால் எனது மகன் வாங்கிய பணத்தை திரும்ப தராமல் அவரது ஜாதி பெயரை சொல்லி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால், எந்த கொலை மிரட்டலும் விடுக்கவில்லை, அதுபோன்ற சம்பவமும் நடைபெறவில்லை.

17. மேற்படி சம்பவத்தின்போது எனது மகன் ஊரில் இருந்தாரா என்றால், இருந்தார் எனது மகன் வேலை முடிந்து எதிரிகள் பிரச்சனை செய்து முடித்த பின்புதான் வந்தார். மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால், எனக்கு பணம் தரவேண்டிய பிரச்சனை தொடர்பாக மட்டும்தான் சொன்னேன். எனது மகன் பிரச்சனை குறித்து எதுவும் சொல்லவில்லை.

18. நான் எனது மகனை SC/STவழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிகள் எனது வீட்டிடம் வந்து பிரச்சனை செய்தததால் புகார் அளித்தேன். புகாரில் தேதி குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எனது மருமகள் BCA படித்து முடித்துவிட்டு வீட்டில்தான் உள்ளார்.

19. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் தேதி குறிப்பிடவில்லை. புகாரில் சொல்லி உள்ள விவரங்களின் அடிப்படையில் நான் சம்பவம் நடந்த அன்றே புகார் அளித்தேன் என்றால் சரிதான். புகாரானது நான் எத்தனை மணிக்கு அளித்தேன் என்றால் இரவு 9 மணிக்கு அளித்தேன். நான் புகார் அளித்த போதே போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தாரா என்றால் நான் புகார் அளித்துவிட்டு வந்துவிட்டேன்.

20. முதல் தகவல் அறிக்கையின் நகல் நான் எப்போது பெற்றுக்கொண்டேன் என்றால் நகல் பெற்றுக்கொள்ளவில்லை. சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும். உண்மையில் சம்பவம் நடந்து இருந்தால் புகாரை மாலை 6 மணியில் இருந்து 6.30 மணிக்குள் அளித்திருப்பேன் என்றால் சம்பவம் நடைபெற்றது 7 மணி ஆகும்.

21. காலதாமதமாக 9 மணிக்கு புகார் கொடுத்ததற்கான காரணம் எனது சின்ன மகன் மளிகை கடை வைத்து இருக்கிறார். சம்பவம் நடந்ததால் எனது மனைவி மற்ற எல்லோரும் பதற்றம் ஆகிவிட்டால் புகார் கொடுக்க காலதாமதமாகிவிட்டது. புகாரில் சொல்லி உள்ள சங்கதிகள் கற்பனையானவை என்றாலும் சம்பவம் நடந்த அன்று நான் எந்த புகாரும் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

22. நான் புகார் அளித்த அன்று எதிரிகளையும் அழைத்து போலீசார் விசாரித்தார்களா என்றால் நான் புகார் அளித்துவிட்டு வீட்டுக்கு சென்றுவிட்டேன். எனது மகன் லோகேஷ் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் சிமெண்ட் கல் (ஆளபிளாக்) அறுக்கும் கம்பெனி வைத்து வேலை செய்து வருகிறார். எனது மகனுக்கு ரூ.40 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனது மகனுக்கு என்ன தகுதி இருக்கிறது எதன் அடிப்படையில் சொன்னேன் என்றால் எனது மகனுக்கு ரூ.40 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எதிரிகளுக்கு என்ன தகுதி இருக்கிறது என்று தான் சொன்னேன்.

23. எனக்கும் 2ம் எதிரி ராகேஷ் என்பவருக்கும் தான் பணம் ரீதியான கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றாலும், எனது மகனுக்கும் 2வது எதிரிக்கும் எந்த கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லி உள்ள சம்பவத்திற்கு முன்பு 1வது எதிரி விக்ரம் என்பவருக்கும் எனக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். 1வது எதிரி விக்ரம் என்பவரை பார்த்து இருக்கிறேனா என்றால் அவர் தான் என்னை செல்போன் மூலமாக மிரட்டினார். நான் கொடுத்த புகாரில் 1வது எதிரி செல்போனில் மிரட்டியதாக சொல்லி உள்ளேனா என்றால் சொன்னேன். போலீசார் மேற்படி விவரத்தை பதிவு செய்தார்களா என்றால் நான் சொன்னேன். போலீசார் பதிவு செய்தார்களா என்று எனக்கு தெரியாது.

24. நான் போலீசார் விசாரணையின் போது 1வது எதிரி என்னை மிரட்டியதாக சொல்லப்படும் செல்போன் எண், எந்த தேதி, நேரத்தில் மிரட்டினார் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் சொல்லி உள்ளேன். எனக்கு தெரியாமல் எனது மகனுக்கு எந்த கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரிதான். எனது மகனுக்கு 30 வயது இருக்கும். நான் புகாரில் சொல்லி உள்ள விவரங்கள் கற்பனையானவை என்றாலும் நான் சம்பவத்தன்று புகார் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் அளித்துள்ள புகாரின் பேரில் தாக்கல் செய்துள்ள வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றாலும், ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

25. வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள 2 முதல் 7 வரையிலான நபர்கள் எனது

உறவினர்கள் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் அக்கம் பக்கத்தில் வாழ்பவர்கள், நெருங்கிய உறவினர்கள் போல் பழகி வருபவர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது எனது வீட்டில் கரண்ட் இல்லை என்றால் சம்பவம் நடந்து முடியும் போது கரண்ட் போய் வந்தது. அப்போது இருட்டாக இருந்தது. சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வந்தார்கள் என்றால் சரிதான்.

26. எனது வீட்டிற்கு மூன்றாவது வீட்டில் முஸ்லீம் திருமணம் நடந்தது. எனது மகனுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் பணம் ரீதியாக இருந்த வாங்கல் கொடுக்கல் இருந்ததை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகனுக்கு எதிராக ST/SC சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து போலீசார் விசாரணையின் போது எனது மகனுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் பணம் ரீதியாக கொடுக்கல் வாங்கல் இருந்தது என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றாலும் தற்பொழுது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

27. நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிப்பதால் என் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இவ்வாறு பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிப்பதற்கு பரதராமி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகரன் அவர்கள் எனக்கு உடந்தை என்றால் சரியல்ல. அவரை நான் புகார் கொடுத்த பின்பு பார்க்கவில்லை.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.